**செய்தி வெளியீடு எண்: 191** **நாள்: 14.03.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 13.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால், தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள, ஐந்து தமிழ் மென்பொருட்கள் அடங்கிய **"தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – III"** (Tamil Inayam Software Suite-III) துவக்கி வைத்தார்கள்.

உலகெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழ்க் கணினி ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம் **"தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டம்"** தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovative Initiatives Scheme) திட்டத்தின் கீழ் 2015–ஆம் ஆண்டில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 15 தமிழ் மென்பொருட்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டு, அவற்றுள் **"தமிழிணையம் ஒருங்குறி மாற்றி"** (Tamil Unicode Converter) மற்றும் **"தமிழிணையம் ஒருங்குறி எழுத்துக்கள்"** (Tamil Unicode Fonts) ஆகிய 2 தமிழ் மென்பொருட்களைக் கொண்ட **"தமிழிணைய மென்பொருள் தொகுப்பு–I"** (Tamil Inayam Software Suite-I) மற்றும் தமிழிணையம்–சொல்பேசி (Tamil Text-to-Speech), தமிழிணையம்–விவசாயத் தகவி (Agriculture Enquiry System), தமிழிணையம்–தொல்காப்பியத் தகவல் பெறுவி (Tholkappiam Information Retrieval System), தமிழிணையம்–தமிழ்ப் பயிற்றுவி (Tamil Teaching and Learning Tool) மற்றும் தமிழிணையம்–நிகழாய்வி (Event Analysis Tool) எனும் 5 தமிழ் மென்பொருட்கள் அடங்கிய **"தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – II"** (Tamil Inayam Software Suite-II) ஆகிய மென்பொருள் தொகுப்புகள் முறையே 23.5.2017 மற்றும் 11.10.2017 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தமிழ் மென்பொருள் தொகுப்புகளை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்திலிருந்து பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டத்தின்கீழ், தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால், தமிழிணையம்–பிழை திருத்தி (Tamil Spell

Checker), தமிழிணையம்—அகராதி தொகுப்பி (Tamil Dictionary Compilation), தமிழிணையம்—கருத்துக்களவு ஆய்வி (Tamil Plagiarism Detection Software), தமிழிணையம்—சொற்றொடர் தொகுப்பி (Sentence Aggregator), தமிழிணையம்—தரவு பகுப்பாய்வி (Corpus Analysis Tools) ஆகிய **5** தமிழ் மென்பொருட்கள் அடங்கிய **"தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – III"** (Tamil Inayam Software Suite-III) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் தொகுப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ் இணைய கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்த **"தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – III"**, தட்டச்சர்கள், தமிழ் நூல்களை வடிவமைப்போர், தமிழ் நூல் வெளியீட்டாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு பேருதவியாக இருக்கும். இந்த மென்பொருள் தொகுப்பினை, கணினியில் தமிழ் எழுத்துக்களை தட்டச்சு செய்கையில் ஏற்படும் எழுத்துப்பிழைகளை கண்டறிந்து அவற்றை பிழைதிருத்தம் செய்தல், தமிழ் சொல்லுக்கு தமிழ் அகரமுதலி, தமிழ் லெக்சிகன், கதிர்வேலு பிள்ளை அகராதி போன்ற அகராதிகளில் உள்ள பொருள் அறிதல், கருத்துக்களவினை கண்டறிதல், தமிழ் தளங்களில் உள்ள சொற்றொடர்களைத் தொகுத்தல், தமிழ் சொற்களை அவற்றின் சொல் எண்ணிக்கை, வகைப்படுத்தல் மற்றும் முன்பின் சொற்களை கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்தலாம். இம்மென்பொருள் தொகுப்பினை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் தேவையான தரவுகளை உள்ளீடு செய்வதன் மூலம் இலவசமாகப் பயன்படுத்தலாம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர் டாக்டர் சந்தர மோகன். பி, இ.ஆ.ப., தமிழ் இணையக் கல்விக் கழக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் திரு.தா.கி. இராமச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9
நாள்: **14.3.2018**